


திருவள்ளூர் மாவட்டம் – திருமழிசை பேரூராட்சி மன்றம் துணைத் தலைவர் தேர்தலில் திமுக வேட்பாளர் அனிதாசங்கர்போட்டியின்றி வெற்றி பெற்றதையொட்டி திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர் சிறுபான்மை மற்றும் வெளிநாடு வாழ தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி ஆகியோரை சந்தித்து வெற்றி பெற்ற சான்றிதழ் காண்பித்து வாழ்த்து பெற்றார்கள். உடன் ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ், பேரூர் கழகச் செயலாளர் தி.வே.முனுசாமி, பேரூராட்சி மன்ற தலைவர் ஜெ.மகாதேவன் உள்பட திமுக கவுன்சிலர்கள் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற தொகுதி பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளம் பயிற்சி கூட்டம் மாவட்ட கழக செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் தலைமையில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.வி.லோகேஷ் வரவேற்பில் பொன்னேரியில் நடைபெற்றது. இதில்தலைமைக் கழகச் செய்தி தொடர்புக்கு துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, சமூக வலைதள தன்னார்வலர் இளமாறன் ஆகியோர் பாக இளைஞர்களுக்குபணியாற்றுவது குறித்து பயிற்சி அளித்தார்கள் இந்நிகழ்ச்சியில் சட்ட மன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் இளைஞரணி மாநில துணைச் செயலாளர் ப.அப்துல் மாலிக், நிர்வாகிகள் ஜெ.மூர்த்தி, மு.பகலவன், கே.வி.ஜி.உமாகேஸ்வரி, ஜி.ஸ்டாலின், பரிமளம் விஸ்வநாதன், பா.செ.குணசேகரன், வெங்கடாஜலபதி,கி.வே. ஆனந்த்குமார், மு.மணிபலன், ஆ.சத்தியவேலு, இரா.அறிவழகன், அபிராமி குமரவேல், ஜெ. மோகன் பாபு, டி.சங்கர், கதிரவன், யுவராஜ், பிரதாப், உள்பட பலர் உள்ளனர்.

### சுகாதார உள்கட்டமைப்பினை உருவாக்க – ஒன்றிய அரசு

# நிதி உதவியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, ஜுலை 28-

இந்தியாவின் சுகாதார உள்கட்டமைப்பு உருவாக்கம், நிதி ஒதுக்கீடு குறித்து நாடாளுமன்ற மக்களவையில் கதிர் ஆனந்த் எம்.பி. கேள்வி

அவரது கேள்வி வருமாறு: -

இந்தியாவின் சுகாதார உள்கட்டமைப்பு WHO நிர்ணயித்த 1,000 பேருக்கு 3.5 படுக்கைகள் என்ற விதிமுறையை விட மிகக் குறைவாக உள்ளது என்பது உண்மையா, அப்படியானால், அதன் விவரங்கள் தருக?

நாட்டில் தற்போதைய மக்கள் தொகை படுக்கைகள் விகிதத்தின் விவரங்கள், மாநில வாரியாக;

நாட்டில் உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் நோயாளிமருத்துவர் விகிதம், நோயாளி செவிலியர் விகிதம், படுக்கைகள் மக்கள் தொகை விகிதம் ஆகியவற்றில் WHO விதிமுறைகளுக்கு இணங்க அரசு எடுத்த நடவடிக்கைகள்; மற்றும் இது தொடர்பாக அனைத்து ஒன்றிய துறை திட்டங்கள் மற்றும் ஒன்றிய மாநில திட்டங்களுக்கான நிதி உதவியை அதிகரிக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தில் ராஜாங்க



அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ் எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு

இந்திய பொது சுகாதார தரநிலைகள் (IPHS 2022) படி 1000 மக்கள்தொகைக்கு 1 படுக்கை வழங்க பரிந்துரைக்கிறது. IPHS விதிமுறைகளின்படி 20000 முதல் 30000 மக்கள்தொகையை உள்ளடக்கிய 6 உட்புற/கண்காணிப்பு படுக்கைகளுடன் கூடிய ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திர் ஆரம்ப சுகாதார மையம் (AAMPHC) 80,000 1,20,000 மக்கள்தொகையை உள்ளடக்கிய 30 படுக்கைகளுடன் கூடிய சமூக சுகாதார மையங்கள் (CHC) 1,00,000 5,00,000 மக்கள்தொகையை உள்ளடக்கிய 31100 படுக்கைகளுடன் கூடிய துணை மாவட்ட மருத்துவமனைகள் மற்றும் 30,00,000 வரையிலான மக்கள்தொகையை உள்ளடக்கிய 101500 படுக்கைகளுடன்கூடிய மாவட்ட மருத்துவமனை ஆகியவை நிறுவப்பட உள்ளன.

மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களால் அறிவிக்கப்பட்ட சுகாதாரப் பராமரிப்பு நிர்வாகத் தரவுகளின் அடிப்படையில், முன்னர் கிராமப்புற சுகாதார புள்ளிவிவரங்கள் என்று அழைக்கப்பட்ட இந்திய சுகாதார இயக்கவியல் (HDI) 202223 (உள்கட்டமைப்பு மற்றும் மனித வளங்கள்) 31.03.2023 நிலவரப்படி இந்தியாவில் PHC CHC துணை மாவட்ட மருத்துவமனை, மாவட்ட மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் 8,18,661 படுக்கைகள் இருப்பதாகக் கூறுகிறது.

தேவை மற்றும் நிதி கிடைக்கும் தன்மைக்கு ஏற்ப தங்கள் அதிகார வரம்பிற்குட்பட்ட மருத்துவமனைகளில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வது மாநில/யூனியன் பிரதேசங்களின் (UTs) முதன்மைப் பொறுப்பாகும். இருப்பினும், பல்வேறு திட்டங்கள் மூலம் மக்களுக்கு சிறந்த சுகாதார வசதிகளை வழங்குவதற்கான முயற்சிகளில் மத்திய அரசு மாநில/யூனியன் பிரதேச அரசுகளுக்கு உதவி செய்கிறது.

தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ் திட்ட அமலாக்கத் திட்டங்கள் (PIPs) வடிவில் பெறப்பட்ட திட்டங்களின் அடிப்படையில், பொது சுகாதார அமைப்பை வலுப்படுத்த மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கு தொழில்நுட்ப மற்றும் நிதி ஆதரவை வழங்குகிறது. இந்திய அரசு விதிமுறைகள் மற்றும் கிடைக்கக்கூடிய வளங்களின்படி இந்த திட்டத்திற்கு நடவடிக்கைப் பதிவு (RoPs) வடிவத்தில் ஒப்புதல் அளிக்கிறது.

PMAyushman Bharat சுகாதார உள்கட்டமைப்பு திட்டம் (PMABHIM): மத்திய நிதியுதவி திட்டத்தின் (CSS) கூறுகளின் கீழ், மாவட்ட மருத்துவமனைகள் அல்லது மருத்துவக் கல்லூரிகளில் 100 மற்றும் 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சை மருத்துவமனை தொகுதிகளுக்கு (CCBs) 202122 முதல் 202526 வரையிலான நிதியாண்டில் 621 CCBகளை அமைப்பதற்காக ரூ. 18,799.21 கோடி நிதியுதவி மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

PMABHIM இன் மத்திய துறை கூறுகளின் கீழ், 12 AIIMS மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களில் (INIs) 150 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சை தொகுதிகள் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளன.

இந்தியா கோவிட்19 அவசர சிகிச்சை மற்றும் சுகாதார அமைப்பு தயார்நிலை தொகுப்பு II (ECRPII): "இந்தியா கோவிட்19 அவசர சிகிச்சை மற்றும் சுகாதார அமைப்பு தயார்நிலை தொகுப்பு": கட்டம் II ரூ.23,123 கோடிக்கு. ECRPII மத்திய துறை (CS) மற்றும் மத்திய நிதியுதவி திட்டங்கள் (CSS) கூறுகளைக் கொண்டுள்ளது.

பிரதான் மந்திரி ஸ்வஸ்த்ய சுரக்ஷா யோஜனா (PMSSY): நாட்டில் மலிவு விலையில் மூன்றாம் நிலை சுகாதார சேவைகள் கிடைப்பதில் உள்ள பிராந்திய ஏற்றத்தாழ்வுகளை சரிசெய்வதையும், தரமான மருத்துவக் கல்விக்கான வசதிகளை அதிகரிப்பதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தத் திட்டம் இரண்டு கூறுகளைக் கொண்டுள்ளது, அதாவது, (i) அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனம் (AIIMS) அமைத்தல்; மற்றும் (ii) தற்போதுள்ள அரசு மருத்துவக் கல்லூரிகள்/நிறுவனங்களை (GMCIs) மேம்படுத்துதல். இதுவரை 22 புதிய AIIMSகளை அமைப்பதற்கும் GMCIகளை மேம்படுத்துவதற்கான 75 திட்டங்களுக்கும் பல்வேறு கட்டங்களில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

புதிய மருத்துவக் கல்லூரிகளை நிறுவுவதற்கான ஒன்றிய அரசின் நிதியுதவி திட்டத்தின் கீழ் தற்போதுள்ள மாவட்ட/பரிந்துரை மருத்துவமனைகளுடன், நாட்டில் மொத்தம் 157 மருத்துவக் கல்லூரிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன

நாடு முழுவதும் சுகாதார விளைவுகளை மேம்படுத்தும் நோக்கத்துடன், நிதி ஆதரவை அதிகரிப்பதற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை இது மீண்டும் உறுதிப்படுத்துகிறது. இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நெல்லை வே.ஆழ்வார்

ஜுலை 28 (2008)



தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

தொடர்ந்து பத்து ஆண்டுகளாக திருநெல்வேலி நகரச் செயலாளராகவும், கழகத்திற்கு சோதனை ஏற்பட்டபோது நகர பொறுப்பாளராகவும், பின்னர் பொதுக்குழு உறுப்பினராகவும் கழகத்தில் பொறுப்பு வகித்தவர்.

திருநெல்வேலி நகர்மன்ற உறுப்பினராக கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் நடத்திய பல போராட்டங்களிலும் பங்கேற்றதோடு மட்டுமல்லாமல் குறிப்பாக, மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### திருவண்ணாமலைக்கு மக்கள் அதிகம் வருகை தருவதால்

# அதிக ரயில்கள் இயக்கப்பட வேண்டும்!

## மக்களவையில் சி.என். அண்ணாதுரை வலியுறுத்தல்



திருவண்ணாமலை, ஜுலை 28-

திருவண்ணாமலைக்கு அதிக எண்ணிக்கையிலான தினசரி, அதிவிரைவு நேரடி ரெயில்கள் இயக்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் சி.என்.அண்ணாதுரை வலியுறுத்தினார்.

பஞ்சபூத ஸ்தலங்களில் அக்னி ஸ்தலமாக விளங்கக் கூடிய திருவண்ணாமலை அண்ணாமலையார் திருக்கோவிலுக்கு விசேஷ நாட்கள், பௌர்ணமி நாட்கள் உள்ளிட்ட நாட்கள் மட்டுமின்றி தற்பொழுது தினந்தோறும் பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஆந்திரா, கர்நாடகா, தெலுங்கானா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்து வருகை தருகின்றனர்.

திருவண்ணாமலை மாநகருக்கு எளிதாக சுற்றுலாப் பயணிகள் சென்று வரும் அளவிற்கு உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்றார்.

பெங்களூரு ஹைதராபாத் மற்றும் சென்னை ரயில் பாதையை திருவண்ணாமலையுடன் ணைக்கும் தினசரி அதிவேக ரயில்களையும், திருவண்ணாமலை சென்னை இடையே வந்தே பாரத் ரயிலை தாமதமின்றி இயக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பேசினார்.

அதிக எண்ணிக்கையிலான தினசரி, அதிவிரைவு நேரடி ரயில்கள் இயக்கப்படுவதன் மூலம் ரயில்வே துறைக்கு வருமானம் வருவதுடன் வேலைவாய்ப்புகளும் பெருகும் எனவும் கூறினார்.

இவ்வாறு சி.என்.அண்ணாதுரை பேசினார்.

### பிரதமர் யோஜனா திட்டத்தின் கீழ்

# தமிழ்நாட்டில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு?

## மக்களவையில் தே.மலையரசன் கேள்வி!

புதுடெல்லி, ஜுலை 28 -

கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் நாடாளுமன்ற கூட்டத் தொடரில் எழுப்பிய கேள்விகள் வருமாறு

1. பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா கிராமின் (PMAYG) திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் இது வரை கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு?

2. கடந்த மூன்று ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் மாநிலத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது மற்றும் அதற்காக அடையாளம் காணப்பட்ட பயனாளிகள் எத்தனை பேர்?

3. வீடுகள் கட்டுவதில் தாமதம் ஏதேனும் ஏற்பட்டிருந்தால் அதற்கான காரணங்கள் என்ன மற்றும் இந்த செயல்பாட்டை விரிவுபடுத்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

4. இந்த திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு நிலத்தை அடையாளம் காண்பதில்



அல்லது அதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் வழங்குவதில் அரசாங்கம் ஏதேனும் சவால்களை எதிர்கொண்டதா?

5. அவ்வாறு சவால்களை எதிர்கொண்டு இருந்தால் அத்தகைய பிரச்சனைகளை தீர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

6. தமிழ்நாட்டில் இத்திட்டத்தை முடிக்க நிர்ணயிக்கப்பட்ட இலக்கு மற்றும் அதை அடைவதற்கான காலக்கெடு என்ன?

இவ்வாறு அவர் கேள்விகள் எழுப்பினார்.

### நாமக்கல்லில் உறுப்பினர் சேர்க்கை பிரச்சாரம்!

நாமக்கல் ஜுலை 28

திமுக தலைமைக் கழக அறிவிப்பின்படி, கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைப்படி தமிழ்நாடு முழுவதும் கிராமப்புற, நகர்ப்புற பகுதிகளில் கழக நிர்வாகிகள் ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தின் கீழ் உறுப்பினர் சேர்க்கை நடத்தி வருகின்றனர்.

அதேசமயம் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையை கல்லூரி மாணவ, மாணவிகளிடம் கொண்டு சேர்க்கும் வகையில் தமிழ்நாடு முழுவதும் திமுக மாணவர் அணி சார்பில் விழிப்புணர்வு பிரச்சாரம் நடைபெற்று வருகிறது.

கழக மாணவரணி அறிவிப்பின்படி நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் ஆலோசனைப்படி நாமக்கல் சட்டமன்ற தொகுதி நாமக்கல் திருச்சி சாலையில் உள்ள கவிஞர் ராமலிங்கம் அரசு மகளிர் கல்லூரி வாயில் முன்பாக நாமக்கல் கிழக்கு மாவட்ட மாணவரணி சார்பில் நாமக்கல் கிழக்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் கடல் அரசன் கார்த்தி தலைமையில், துணை அமைப்பாளர்கள் எம்.என். டி.கௌதம், சங்கீதா ஆகியோர் முன்னிலையில் திராவிட மாடல் ஆட்சியில் கல்விக்கு தரும் முக்கியத்துவம் மற்றும் புதுமைப்பெண் திட்டத்தை செயல்படுத்திய முதல்வருக்கு நன்றி கூறியும், ஒன்றிய பாஜக அரசுக்கு எதிராக ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தின் கீழ் உறுப்பினராக இணைய மாணவிகளிடம் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் , மாமன்ற உறுப்பினர்கள் சரோஜா, கிருஷ்ண லட்சுமி, வார்டு செயலாளர் சரவணன், ரபீக், சார்பு அணி நிர்வாகிகள் கௌதம், ராஜேஷ் , ஸ்ரீராம், அஜித், பவித்ரன், நிதிஷ், சிவரஞ்ஜினி, மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சென்னை மேற்கு மாவட்ட பகுதிச் செயலாளர்கள் - வட்டச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை!



தமிழ்நாடு முதல்வர் கழக தலைவர் அவர்களின் ஆணையின்படி, கழக ஆக்கப்பணிகள் மேற்கொள்வது குறித்து சென்னை மேற்கு மாவட்டம் பகுதி கழக செயலாளர்கள் மற்றும் வட்டக் கழக செயலாளர்கள் கலந்து கொள்ளும் ஆலோசனை கூட்டம் இன்று (28.7. 2025 - திங்கள் கிழமை ) காலை 11.00 மணியள வில் நுங்கம்பாக்கம், காம்தார் நகர் முதல் தெருவில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் நடைபெறுகிறது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள், மருத்துவர் நா.எழிலன் எம்.கே.மோகன், தொகுதி பார்வையாளர்கள் சி.எச். சேகர், வே.கௌதமன், சைதை சாதிக் முன்னிலை வகிக்கின்றனர். பகுதிக் கழக செயலாளர்கள் ந.இராமலிங்கம், மா.பா.அன்புதுரை, ஏ.ஆர்.பி.எம். காமராஜ், எஸ்.மதன்மோகன் ச.பரமசிவம் மற்றும் வினோத் வேலாயுதம் வரவேற்புரையாற்றுகிறார்கள்.

எனவே, சென்னை மேற்கு மாவட்ட சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வட்டக்கழக செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : கழக ஆக்கப்பணிகள்

நே.சிற்றரசு
செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.





தாம்பரம் மாநகர தி.மு.க. மாணவர் அணி சார்பில் ”ஓரணியில் தமிழ்நாடு எனும் தலைப்பில் கழக அரசின் சாதனைகளை விளக்கி துண்டறிக்கை விழிப்புணர்வுப் பிரச்சாரம் கிழக்கு தாம்பரம், சென்னை கிருத்துவக் கல்லூரி வாயிலில் தாம்பரம் மாநகர மாணவர் அணி துணை அமைப்பாளர் குட்டி (ஏ) மு.தினேஷ்குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் மாநகரக் கழகச் செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். ஆர்.ராஜா, மண்டலக்குழு தலைவர்கள் எஸ்.இந்திரன், டி.காமராஜ் மற்றும் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள், பகுதி இளைஞரணி, மாணவரணி நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் துண்டறிக்கையை வழங்கினர்.